(4) அரசினர் சட்ட முன் வடிவுகள்.

(அ) 1974-ம் ஆண்டு, இன்றியமையாப் பொருள்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1974-ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு மன்னை திரு. ப. நாராயணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, 1974-ம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1974-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) திருத்த சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 3/74) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

இச்சட்ட முன்வடிவை முன் மொழிகையில் நான் ஒன்று கூற விழைகிறேன். இந்திய அரசுடன் இது குறித்து விவாதித்தோம். அந்த விவாதங்களின் அடிப்படையில் தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு பொதுப் பணியாற்றுவோர் (குற்ற நடத்தை) சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 2/1974) திருத்தங்கள் சிலவற்றைச் செய்யக் கருதப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தின் 8-வது பிரிவின் கீழ் குற்ற நடத்தை பற்றிய புகார் ஒன்று, அக்குற்ற நடத்தை எந்த நாளன்று செய்யப் பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதோ அந்த நாளிலிருந்து ஓராண்டு முடிவடைந்த பின்னர் அல்லது குற்றம் சாட்டப்பட்டுள்ள பொதுப் பணியாற்றுபவர் எந்த நாளன்று பொது வாழ்விலிருந்து விலகிக் கொள்கிறாரோ அந்த நாளிலிருந்து ஆறு திங்கள் முடிவடைந்த பின்னர், இவற்றில் எது பிந்தியதோ அக்கால அளவுக்குப் பின்னர் புலனாய்வு செய்யப்படக்கூடாது. "ஓராண்டு" கால அளவு, "ஆறு திங்கள்" கால அளவு என்பவை முறையே "ஐந்து ஆண்டுகள்", "ஓராண்டு" என்பதாக உயர்த்தப்பட வேண்டுமென்றும் அப்புகார்

* 23—1—1974 தேதி தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.